DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.302/2015**

Deposition of :PW -24

| | | |
|---|---|---|
| Name | : பொன்னுசாமி | Caste: |
| Father's / Husband Name: | | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 30th day of January 2025.

A1 and A3 to A6 present.

**முதல் விசாரணை**

நான் பொரசல்பட்டி, ராசிபுரம், நாமக்கல் மாவட்டத்தில் குடியிருக்கிறேன். நான் விவசாயம் செய்கிறேன். 1வது எதிரியை எனக்கு தெரியாது. இறந்துபோன விஜயன் எனது உறவினர். ஆனால் அதிக பழக்கம் இல்லை. வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள். கேட்டார்கள். எனக்கு எதுவும் தெரியாது என்று சொல்லிவிட்டேன்.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி கு.வி.செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொணடதற்கிணங்க அனுமதி வழங்கப்பட்டது)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எனக்கு சொந்தமான 2 ஏக்கர் நிலத்தை சுந்திரமுர்த்திக்கு விற்பனை செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். தற்போது ஆஜர் எதிரி சுந்தரமூர்த்தியை தெரியும் என்று சொல்லுகிறார். அந்த நிலத்தை இறந்துபோன விஜயன் என்னிடம் விலைக்கு கேட்டார் என்றும் நான் நிலத்தை கிரயம் கொடுக்க மறுத்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல.

1வது எதிரியிடம் விஜயன் அதே விலைக்கு நிலத்தை கேட்டார் என்றும், ஆனால் 1வது எதிரி கிரயம் கொடுக்க மறுத்துவிட்டார் என்றும் நான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி நிலபிரச்சனை தொடர்பாக 1வது எதிரிக்கும், விஜயனுக்கும் பிரச்சனை இருந்தது என்று புலன்விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல.

மேற்சொன்ன விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு 1வது எதிரி என் உறவினர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**3 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னை ஆட்டையாம்பட்டி காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தபோது 5வது எதிரி அருண்குமாரை நான் காவல் நிலையத்தில் வைத்து பார்த்தேன். மேற்படி அருண்குமாரை நான் 10 நாட்கள் காவல்நிலையம் சென்றபோது காவல்நிலையத்தில் வைத்து பார்த்தேன். எதிரி அருண்குமாரை ஆட்டையாம்பட்டி காவல்நிலையத்தில் போலிசார் 10 நாட்கள் பிடித்து வைத்திருந்தார்கள் என்றால் ஆமாம்.

**1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

மறுவிசாரணை இல்லை.

Sd/- L. Kalaivani,

III Additional District Judge,

Salem.